31.03.2021

**MCOP No**.2283/2017

<u>மனுதாரர் தரப்பு சாட்சி - 1-ராஜலெட்சுமி</u>

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து சம்மந்தமாக நேரடியாக தெரியாது. விபத்திற்கு பின்னிட்டு தான் விபத்து நடந்த விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டேன். விபத்து மதுரை-மேலூர் செல்லும் கிழமேல் சாலை ஆகும். விபத்து மேலூர் யூனியன் அலுவலகம் அருகே தான் நடந்தது. TN59 BZ 2295 என்ற இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்காக என் கணவர் சென்றார். என் கணவர் சென்ற இருசக்கர வாகனத்திற்கு முன்பு TN59 BZ 6262 என்ற தனியார் பேருந்து சென்று கொண்டிருந்தது. அரசு பேருந்து மேற்கிலிருந்து கிழக்காக வந்தது. அரசு பேருந்து சரியான திசையில் தான் சென்றுகொண்டிருந்தது என்றாலும், அரசு பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை சரியான திசையில் மிதமான வேகத்தில் தான் ஓட்டிச்சென்றார் என்றாலும் என் கணவர் தான் தனியார் பேருந்தை முந்தி செல்ல முயன்று பின்பக்கம் மோதி நிலை தடுமாறி எதிரே வந்த அரசு பேருந்தின் முன்பக்கத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும், அதனால் எதிர்மனுதாரர்கள் விபத்திற்கு எந்த விதத்திற்கு காரணம் அல்ல என்றாலும், என் கணவர் தான் விபத்திற்கு காரணம் என்றாலும் சரியல்ல. முத்துகுமரன் என்பவர் மேலூர் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றி வருகிறார். அவர் எனது உறவினர். என்னுடைய உறவினரின் செல்வாக்கை பயன்படுத்தி அரசு பேருந்தின் ஓட்டுநர் சரியான திசையில் பேருந்தை ஓட்டி வந்த போதும் என் கணவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதை மறைத்து அரசு பேருந்தின் ஓட்டுநர் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், விபத்திற்கு என்னுடைய கணவர் தான் காரணம் என்றாலும், சரியல்ல. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை விபத்து அரசு பேருந்தின் வலது முன் பக்க டயர் அருகே நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்திற்கு என் கணவரின் கவனகுறைவு தான் காரணம் என்றாலும் அதனால் 1,2 எதிர்மனுதாரர்கள் எந்த விதமான இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால், சரியல்ல. தற்சமயம் நான் வேலைக்குசென்று கொண்டிருக்கிறேன். என் கணவரின் வருமானத்தை மட்டும் நம்பி நான் இருக்கவில்லை என்றாலும், சரியல்ல. மனுவில் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால், சரியல்ல. விபத்திற்கு முன்பு சவுதி அரேபியாவில் எலக்ட்ரிக் கடை வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் ஆண்டு வருமானம் ரூ.75,00,000/- வந்ததாக சொல்லியுள்ளேன் அதைக்காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. ம.சா.ஆ-5 மற்றும் 6ல் என்ன குறிப்பிடப்

பட்டுள்ளது என்று தெரியாது. அது அரேபியன் மொழியில் உள்ளது. ம.சா.ஆ.7 2005 ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. ம.சா.ஆ.8 எத்தனை ஆண்டுகள் வரை செல்லுப்படியாகும் என்று குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. ம.சா.ஆ.9 மூலம் எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றாலும் அந்த ஆவணம் ஏற்கத்தகுந்த ஆவணம் அல்ல என்றாலும், சரியல்ல. ம.சா.ஆ.10 வங்கி கணக்கு புத்தகம் 2010 ஆண்டுடன் விபத்திற்கு பின்பு பரிவர்த்தனை எதுவும் செய்யப்படாமல் உள்ளது. அந்த சமயத்தில் என் கணவரின் வங்கி கணக்கில் ரூ.2,36,708/- இருந்ததாக கண்டுள்ளது. ம.சா.ஆ.5 முதல் 10 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால், சரியல்ல. தனியார் பேருந்தை அதன் இன்சூரன்ஸ் கம்பெனியை இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்றாலும், அதை சேர்க்காததால் இந்த மனு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல.

**<u>2 ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையை 1 ம் மனுதாரர் ஏற்றுக்கொண்டார்.</u>**